*(வலைபின்னல் மாற்றுமுறை)*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## *1999 ஆம் ஆண்டின் 13 ஆம்* இலக்க, மாவத்தகம அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(1999, யூன் மாதம் 4 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1999, யூன் மாதம் 4 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக்** குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை : ரூபா 7.75** **தபாற் செலவு : ரூபா 3.50**

***1999 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, மாவத்தகம அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்***

[*1999 ஆம் ஆண்டு யூன் மாதம் 4 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.-ஓ.31/96.*

## *மாவத்தகம அபிவிருத்தி மன்றத்தை கூட்டிணைப்பதற் கானதொரு சட்டம்*

*“மாவத்தகம அபிவிருத்தி மன்றம்” என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான ஒரு மன்றம், அதன் உறுப்பினர்களால் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றி அததுடன் அதன் குறிக்கோள்களையும் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்கென இதற்கு முன்னர் மாவத்தகமவில் தாபிக்கப்பட்டிருந்ததாதலாலும் :* முன்னுரை.

*சொல்லப்பட்ட மன்றம் எக்குறிக்கோள்களுக்கும் கருமங் களுக்குமாகத் தாபிக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் அது இதுவரையில் வெற்றி கரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் போது மக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும் :*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

***1.*** *இச்சட்டம், 1999 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, மாவத்தகம அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.* கருக்கப் பெயர்.

***2.*** *இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் “மன்றம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) மாவத்தகம அபிவிருத்தி மன்றத்தில் உறுப்பினர்களாகத் தற்போதுள்ளவர்களும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்பின்னர் சேர்த்துக் கொள்ளப் படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் “மாவத்தகம அபிவிருத்தி மன்றம்” என்னும் பெயரின்கீழும் மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டும்; அத்துடன் அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அந்த இலச்சினையை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் பெற்றதாயிருத்ததலும் வேண்டும்.* மாவத்தகம அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாயிருக்க வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) ஏழை மக்களின் பொருளாதார நிலைமகளை மேம்படுத்தல் ;

(ஆ) உள்ளூர் உயிர்வாழ் துறையிலும் கமத்தொழில் ஏற்றுமதித்துறையிலும் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உதவி வழங்குவதுடன் அத்தகைய துறைகளில் உற்பத்தியை ஊக்குவித்தலும் ;

(இ) காணி அபிவிருத்தி மற்றும் விவசாய நடவடிக்கைகளை முகாமையைப் பொறுப்பேற்றல் ;

(ஈ) கிராமிய சிறு கைத்தொழில், சுயதொழில் முயற்சியை உருவாக்குதல் என்பவற்றுக்கு ஊக்கமும் உதவியும் அளித்தல் ;

(உ) ஏழை மக்கள் தமது சுயமுயற்சிகளில் தங்கியிருப்பதற்கு ஊக்கமளித்தலும் ஊக்குவிப்புகளை வழங்குதலும் ;

(ஊ) வறுமையை ஒழிப்பதற்குச் சமுர்தி இயக்கம் என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் குறிக்கோள்களை எய்துவதற்குத் தீவிர பங்களிப்பு செய்தல் ;

(எ) அடிப்படைச் சுகாதாரம் குறித்து மக்களை ஊக்கு வித்தலும் அதன்மீது ஆலோசனை வழங்குதலும் ;

(ஏ) செயற் திறனுள்ள சமுதாயத் திட்டங்கள் மூலம் சுகாதாரம் மற்றும் போஷாக்கு நிலை என்பவற்றை மேம்படுத்தலும் சமூக நலன்புரி நடவடிக்கைகளுக்கு உதவியளித்தலும் ;

(ஐ) குடிநீர் வசதிகளை வழங்குவதற்கான நிதியுதவிமற்றும் ஆலோசனைகளை வழங்கல் ;

(ஒ) கிராமங்களில் குறைந்த வருமானத்தைப் பெறும் ஏழை மக்களுக்கு வீடமைப்பு தொடர்பான கருமங்களில் ஆலோசனையும் உதவியும் வழங்கல் ;

(ஒ) மதுபானம், போதைப்பொருள், புகைபிடித்தல் என்பவற்றால் ஏற்படும் தீய விளைவுகள் பற்றிப் பொது மக்களுக்கு அறிவு புகட்டுதலும் இந்த அச்சுறுத்தலில் இருந்த மக்களை விடுவித்தலும் ;

(ஔ) சுதேசியப் பண்பாட்டின் அடிப்படை மாண்புகளைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுதல் ;

(க) சிராமியப் பண்பாட்டு முக்கியத்துவம் குறித்து மக்களுக்கு அறிவூட்டலும் அதன் மூலம் சமுதாயத்தில் நற்பண்புகளை உறுதிப்படுத்தலும் ;

(ங) முக்கிய சமய வழிபாட்டுத் தலங்களை அடிப்படையாகக் கொண்ட கலாசார நிகழ்ச்சிகளை நடாத்துதல் ;

(ச) தேசிய மற்றும் சமய விழாக்களில் சுதேசிய கலாசார முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டக்கூடிய நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல் ;

(ஞ) இதுவரைகாலமும் சிதைந்து கொண்டிருந்த சுதேசிய பண்பாட்டு மாண்புகளின் அபிவிருத்திக்குப் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் ஊடாக ஊக்கம் அளித்தல் ;

(ட) பாலர் பாடசாலைக் கல்வியை மேம்படுத்துவதில் பங்கெடுத்தலும் உதவி வழங்கலும், அதற்கான திட்டங்களை வகுத்தலும் ;

(ண) முறைசார்ந்த கல்வித் திட்டத்தின் ஊடாக அரசாங்கப் பரீட்சைகளுக்கு அமரும் மாணவ, மாணவியருக்கான கருத்தரங்கு மற்றும் உரையாடல்களை நடாத்துவதன் மூலம் அவர்களுக்கு உதவி புரிதல் ;

(த) பாடசாலைக் கல்வியை இடையில் நிறுத்திய பிள்ளைகளுக்கு அவர்களின் கல்வியறிவை மேம்படுத்துவதற்கு நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துல் ;

(ந) முறைசாராக் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உதவிபுரிதலும் அவற்றை நடைமுறைப்படுத்துதலும் ;

(ப) நூல்நிலைய சேவைகளின் வசதிகளை ஏற்பாடு செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4.** இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கும் அமையக் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்குத் தேவையான வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும். நடாத்தவும், முடிவுறுத்தவும், பிணைப் பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றிப் பணங்களைக் கடனெடுக்கவும், கொடைகளையும், நன்கொடைகளையும் பெற்றுக் கொள்ளுதலும், சேகரித்தலும், அதன் நிதியங்களை முதலீடு செய்ய ஒப்பந்தங்களில் ஈடுபடவும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும், சேவையாளர்களையும் வேலையிலீடு படுத்தல், வேலைக்கமர்த்தல், வேலைநீக்கம் செய்தல் ஆகியவற்றுக்கான தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தகையதுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேன்டும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5.** *(1)* கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமைய தெரிவு செய்யப்பட்ட தலைவர், உப தலைவர், கெளரவ செயலாளர், கெளரவ பொருளாளர் மற்றும் நிறைவேற்றுக்குழு அங்கத்தவர்களிடையேயிருந்து தெரிவுசெய்ப்பட்ட மூன்று பணிப்பாளர்களையும் கொண்டமைந்த முகாமைச்சபை ஒன்றின்மூலம் அப்போதைக்கு வலுவிலுள்ள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கினங்க நிருவகிக்கப்படுதல் வேண்டும். நிறைவேற்றுக்குழு 25 உறுப்பினர்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

*(2)* கூட்டுத்தாபனத்தின் தவிசாளர் கூட்டுத்தாபனத்தின் பிரகம நிறைவேற்றுநராகவிருத்தல் வேண்டுமென்பதுடன் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை வகித்தலும் வேண்டும்.

*(3)* கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைச்சபை இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய தினத்தன்று பதவி வகிக்கும் மன்றத்தின் முகாமைச்சபை உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்

**6.** (1) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளைக் கொண்டும். பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்காகவும் அல்லது அவற்றுள் எதற்காகவும், இச்சட்டத்தினது அல்லது எழுத்திலான வேறு சட்டத்தினது ஏற்பாடுகளுக்கும் ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்ததுக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :–

(அ) உறுப்பாண்மையை வகைப்படுத்தல், உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளுதலும், உறுப்பினர்கள் விலகுதலும் அல்லது அவர்களை விலக்குதலும் ;

(ஆ) பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல், பதவிதாங்குநர்கள் தமது பதவியிலிருந்து விலகுதல் அல்லது பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதலும் அவர்களின் தத்துவங்களும், நடத்தையும், கடமைகளும் ;

(இ) முகாமைச்சபை நிறைவேற்றுச்சபை உறுப்பினர்களைத் தெரிவுசெய்தலும் அவற்றின் தத்துவங்களும், கடமைகளும் அத்துடன் பதவிக்காலமும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள். முகவர்கள் அத்துடன் சேவையாளர்கள் என்போரின் தத்துவங்களும், ஒழுக்கமும், கடமைகளும், பணிகளும் ;

(உ) முகாமைச்சபை மற்றும் நிறைவேற்றுக்குழு என்பவற்றின் கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்துதலும், அக்கூட்டங்களில் அவதானிக்கப்படவேண்டிய நடவடிக்கை முறையும் அத்தகைய கூட்டங்களின் நேரங்களும், இடங்களும் அறிவித்தல்களும், நிகழ்ச்சிநிரலும், அவற்றுக்கான கூட்டநடப்பெண்ணும் அவற்றின் கருமமாற்றலும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும் அதன் நிதிகளின் கட்டுக்காப்பும் அதன் கணக்குகளைப் பேணுதலும், கணக்காய்வு செய்தலும் ;

(எ) பொதுவாகக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்கும் அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கும்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்படும் விதி எதுவும் (1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆக்கப்படும் விதியொன்றென்றாற் போன்று அதேபோன்ற கூட்டத்திலும் அதேமுறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்குச் சேர்க்கப்படலாம் அல்லது நீக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் எல்லா உறுப்பினர்களும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

*மன்றத்தினால் செலுத்தப்படற்பாலனவும் மன்றத்திற்குச் செலுத்தப்படற்பாலனவுமான கடன்கள்.*

**7**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்தின் எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தினத்தன்று மன்றத்திற்குக் கிடைக்கவேண்டிய எல்லாக் கடன்கள், ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் என்பன யாவும் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம்.*

**8**. கூட்டுத்தாபனம் ஏதேனும் கொள்வனவு, அளிப்பு, நன்கொடை, இறுதிவிருப்பாவணக்கையளிப்பு அல்லது வேறேதேனும் விதமாகக் கிடைக்கக்கூடிய ஏதாவது அசைவுள்ள. அசைவற்ற ஆதனத்தைப் பெறவும் வைத்திருக்கவும் கூட்டுத்தாபனத்தின் சட்டதிட்டங்களுக்கிணங்க அவற்றை விற்கவும் ஈடுவைக்கவும், குத்தகைக்குக் கொடுக்கவும் பரிமாறிக்கொள்ளவும் அல்லது வேறுவகையில் கையாளவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**9**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது தலைவர், கௌரவ செயலாளர் அல்லது கௌரவ பொருளாளர் முன்னிலையிலன்றி எந்தவொரு சாதனத்திலும் பொறிக்கப்படல் ஆகாதென்பதுடன் தாம் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாதனத்தில் கையொப்பமிடல் வேண்டும். அப்படிக்கையொப்பமிடுதல் சாட்சியாக எவரேனுமொருவர் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.

**10.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசினது உரிமைகளையேனும் ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும், இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும் அவர்கள் மூலம், அவர்களில் இருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளைப் பங்கப்படுத்துவதாகவோ பாதிப்பதாகவோ இருத்தல் ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**11.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர். அரசாங்க வெளியீட்டலுவலகம் இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*